பிரம்மைகளின் மாளிகை

-----------------------------------------------

பிரம்மைகளால் கட்டப்பட்ட
ஒரு மாளிகையில்
வாழ்ந்து வருகிறேன் எழுபது ஆண்டுகளாய்
நான்.
அன்பு,பாசம், நன்றி, விசுவாசம்
விரோதம், துரோகம், பழிவாங்கல்
வெந்ததும் வேகாததுமான செங்கற்களால்
விதவிதமாய் அலங்கரித்திருக்கிறேன்
எனது மாளிகையை.
எவர் எவரோ போட்ட
செங்கல் சூளைகளின் நெருப்பில்
சுடப்பட்டுள்ளன
என் மாளிகையைக் கட்டி எழுப்பியதற்கான
செங்கற்கள்.
சாதி, மதம்,
தேசம், எதிர்தேசம்
சின்னவன், பெரியவன்
புத்திசாலி , முட்டாள்,
நேர்மையாளன் , அயோக்கியன்
என்று நீளும் என் தீர்ப்புகளின்
வாஸ்து சாஸ்திரம் பார்த்து
என் மாளிகையைப்
பலமுறை இடித்துக் கட்டி விட்டேன்.
நிஜத்தில் நான் யார்
என்று யாருக்கும் தெரிந்திராத
இந்த அந்நிய நகரத்தின் சூரியன்
பெயர் தெரியாத தெருக்களில்
என்னை
ஒரு நிழலாகப் பிடித்துத் தள்ளுகிறது.
இப்போது ஒவ்வொரு செங்கல்லாய்ப்
பெயர்ந்து விழுகிறது
என் பிரம்மைகளின் மாளிகை.
இன்று இந்த இடிபாடுகளிலிருந்து

ரத்தம் சொட்டச் சொட்ட
காயத்தோடு எழுந்து வருகிறது
நான் எனும் மாளிகையைக் கட்டி எழுப்பிய
நான்.
-----------------------------------------------------------
25-09-2017

